# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No. : 244/2019**

**நாள் : 03.07.2025**

**வா.சா.1 திரு. சுரேஷ்குமார் –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

யாருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மீது உரிமைகேட்டு வழக்கு போட்டுள்ளேன் என்றால் சுப்பையா நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சுப்பையா நாடாரின் மனைவி பெயர் சண்முகத்தம்மாள் என்றால் சரிதான். சுப்பையா நாடார் எனக்கு எப்படி தாத்தா முறை என்றால் நேரடியாக அம்மா வழி தாத்தா கிடையாது. சுப்பையா நாடார் எனக்கு தாத்தா என்பதை காட்ட கொடிவழி ஜாபிதா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுப்பையா நாடார் – சண்முகத்தம்மாளுக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். சுப்பையா நாடாருக்கு உடன் பிறந்த சகோதரிகள் மாரியம்மாள், வள்ளியம்மாள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

சண்முகத்தம்மாளின் உடன் பிறந்த மூத்த சகோதரி வள்ளியம்மாள் என்றால் சரிதான். அந்த வள்ளியம்மாளின் மகள் பெயர் செல்லம் என்றால் சரிதான். மேற்படி செல்லத்தின் மகன்தான் நான் என்றால் சரிதான்.

சுப்பையா நாடாரின் சகோதரியான மாரியம்மாளுக்கு இசக்கி முத்து என்ற பெயரில் 2 குமாரர்கள் உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 7, 8 பிரதிவாதிகளாக காட்டியுள்ள இசக்கி முத்து என்ற நபர்கள் யார் என்றால் அவர்கள் என்னிடம் பிரச்சனை செய்ததால் அவர்களை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன். 4, 5 பிரதிவாதிகளான மாரிமுத்து, கனகராஜ் ஆகியோர் 7வது பிரதிவாதியான இசக்கி முத்துவின் மகன்கள் என்றால் அவர்களும் என்னிடம் தகராறு செய்தார்கள். 8வது பிரதிவாதியான இசக்கி முத்துவின் மகன்கள்தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சுப்பையா

நாடாரின் சகோதரி வள்ளியம்மாளுக்கு சுப்பையா என்ற ஒரு மகன் உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சுப்பையாவின் மகனான பழனியப்பன் என்பவரை இவ்வழக்கில் 9 வது பிரதிவாதியாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 9 வது பிரதிவாதியின் மனைவியான செண்பகவல்லியை 6 வது பிரதிவாதியாக இவ்வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

சுப்பையா நாடார் எனது தாத்தா என்ற முறையில் சொத்தில் உரிமை உள்ளதாக நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுதி வைக்கப்பட்டதாக சொல்லப்படும் உயில் வா.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயிலை எழுதியது யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி உயில் எந்த வருடம், மாதத்தில் எழுதப்பட்டது என்றால் 11.01.2019 ம் தேதியில் எழுதப்பட்டுள்ளது. அதன் தமிழ் மாத, வருடம் தெரியாது. சுப்பையா நாடார் உயில் எழுதிய சமயத்தில் அவருக்கு 93 – 94 வயதிருக்கும். மேற்படி உயிலில் நான் சுப்பையா நாடாருக்கு என்ன வகையில் உறவு என காட்டப்பட்டுள்ளது என்றால் சுப்பையா நாடாரின் மனைவியின் உடன் பிறந்த சகோதரியின் மகள் வயிற்றுப்பேரன் என்ற வகையில் உறவு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உடன் பிறந்த சகோதரியின் பெயர் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு நியாபகமில்லை. உயில் எனக்கு எப்போது கிடைத்தது என்றால் 14.01.2019 அன்று எனக்கு கிடைத்தது. உயில் எழுதப்பட்ட காலக்கட்டத்தில் சுப்பையா நாடார் நல்ல உடல்நிலையிலும், மனநிலையிலும் இல்லை என்றால் சரியல்ல. உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது, எழுத்துக்காரர் பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் அப்துல் கபூர் மற்றும் முருகேசன் ஆகியோர் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளனர்.

நான் தற்போது புளியரையில்தான் வசித்து வருகிறேன். சுப்பையா நாடாரும் புளியரை கிராமத்தில்தான் வாழ்ந்தார் என்றால் சரிதான். முதல் சாட்சி அப்துல் கபூர் திருநெல்வேலி, பாளையங்கோட்டை பகுதியை சேர்ந்தவர். என்ன

காரணத்திற்காக பாளையங்கோட்டையில் உள்ள நபர் இந்த உயிலில் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 2ம் சாட்சி முருகேசன் லாலா குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர். உயில் எழுதியவர் யார் என்ற விவரம் மேற்படி உயிலில் துலங்காது என்றால் சரிதான். 11.01.2019ம்தேதி உயில் எழுதி வைத்த சுப்பையாநாடார், 18.01.2019ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். உயில் எழுதிவைத்த நாளில் சுப்பையாநாடார் நல்ல உடல்நிலையிலும், மனநிலையிலும் இல்லை என்றும், இந்த உயில் என்னால் போலியாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

உயிலில் என்னென்ன சொத்துக்கள் காட்டப்பட்டு உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் தபசில் சொத்துவிபரம் குறிப்பிடப்படவில்லை. சுப்பையா நாடாரின் மனைவியான சண்முகத்தம்மாள் என்பவர் இறந்துவிட்டதாக அவரது இறப்பு சான்றிதழை வா.சா.ஆ.17 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சண்முகத்தம்மாளின் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அது எனக்கு அவசியமில்லை. வா.சா.ஆ.18 உயிலில் சுப்பையாநாடாருக்கு என்னென்ன வங்கிகளில் கணக்குகள் உள்ளன என்றும், வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டிருந்த தொகை எவ்வளவு என்பது குறித்தும் உயிலில் துலங்காது என்றால் சரிதான். சுப்பையாநாடார் வைப்பீடு செய்திருந்த தொகைகளுக்கு என்னை நாமினியாக நியமித்ததாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வங்கியில் பொதுவாக ஒரு நபரை நாமினியாக நியமித்தால் அவர் அந்த தொகையை எடுப்பதற்கு மட்டுமே உரிமை உடையவர் என்றும், அதனை அவரால் செலவு செய்ய இயலாது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இதுவரை எத்தனை வங்கிகளில் எவ்வளவு தொகையை நாமினி என்ற நிலையில் இருந்து எடுத்தேன் என்றால் 2 வங்கிகளிலிருந்து தொகை எடுத்துள்ளேன், எவ்வளவு தொகை என்பது தற்போது எனக்கு நினைவில்லை.

சுப்பையா நாடாருக்கு வெளிநபர்கள் மூலமாக வரவேண்டிய நிலுவைத்தொகை ஏதேனும் நான் பெற்றேனா என்றால் இல்லை. நான் தாக்கல்

செய்துள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் எழுதி வாங்கியவர் என்ற இடத்தில் சுப்பையா நாடார் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான், வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் அவருடையதுதான். வா.சா.ஆ.1ல் கையொப்பமிட்டுள்ள சுப்பையா நாடார்தான், வா.சா.ஆ.18ல் கையொப்பமிட்டுள்ளார். வங்கியில் சுப்பையா நாடார் கையொப்பமிடுவதை நான் பார்த்துள்ளதால் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சையமாகும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் உள்ள சுப்பையா நாடாரின் கையொப்பத்திற்கும், வா.சா.ஆ.18ல் உள்ள சுப்பையா நாடாரின் கையொப்பத்திற்கும் வித்தியாசம் காணப்படுகிறது என்றால் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. மேற்படி ஆவணங்களில் உள்ள கையொப்பங்களில் மாறுபாடு உள்ளது என்றும், வா.சா.ஆ.18 உயில் ஆவணம் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.18 உயில் ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்பதால் அதன் அடிப்படையில் தாவா சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

சுப்பையா நாடார் உயிரோடிருந்த காலத்தில், 01.11.2012ம் தேதியில் 7 முதல் 9 பிரதிவாதிகளுக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 01.11.2012ம் தேதியிட்ட உயில் ஊர்ஜிதத்திற்கு வந்து அதன் அடிப்படையில் 7 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. 01.11.2012ம் தேதியிட்ட உயில் ஆவணத்தின் அடிப்படையில் 7 முதல் 9 பிரதிவாதிகள் தங்கள் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தன்னிச்சையாக அனுபவித்துவருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.18 உயில் ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து பட்டா மாற்றம் செய்து தீர்வை செலுத்தி அனுபவம் செய்துவரவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.31 வரிசையில் உள்ள ரசீதுகள் அனைத்தும் சுப்பையா நாடார் இறந்தபின்னர் 2023 – 2024 காலக்கட்டத்தில் அவரது பெயரில் ஏற்பட்ட தீர்வை ரசீதுகள் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி அவருக்கு ஆதரவாக 01.11.2012ம்

தேதியிட்ட உயில் ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்களை அனுபவம் செய்துவந்து அதனை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஏற்பாடு ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதி, தனது வாரிசுகளான 4, 5 பிரதிவாதிகளுக்கு ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுப்பையா நாடாரின் சகோதரியின் வாரிசுகள் யார் என்று எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில் எவ்வாறு அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் அவர்கள் என்னிடம் சொத்துக்களை அனுபவிப்பதற்கு இடைஞ்சல் செய்ததால் அவர்களை பிரதிவாதிகளாக காட்டியுள்ளேன்.

வா.சா.ஆ.26 ஆவணமாக வட்டாட்சியருக்கு நான் அனுப்பிய ஆட்சேபனை அறிவிப்பை தொடர்ந்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் விசாரணைக்கு அழைத்து நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு நான் நீதிமன்றத்தை அணுகி உரிய வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தேவையில்லை என கருதி உடனே நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. 7, 8ம் பிரதிவாதிகள் செங்கோட்டை நீதிமன்றத்தில் வாரிசுகளாக அறிவிக்க கோரி வழக்கு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் அவர்களுக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 7, 8 பிரதிவாதிகள்தான் 2ம் வகுப்பு சட்டக்கால் வாரிசுகள் என்று வட்டாட்சியர் உத்தரவு பிறப்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

சுப்பையா நாடார் உயிரோடிருந்த காலத்தில் ஸ்விப்ட் கார் வைத்திருந்தார். நானும்அந்த காரை அந்த காலக்கட்டத்தில் ஓட்டியுள்ளேன், கார் ஓட்டுவதற்கென்று ஒரு ஓட்டுநரும் அப்போது வருவார். வா.சா.ஆ.33ல் சுப்பையா நாடாரின் பெயரில் உள்ள ஸ்விப்ட் காரை என் பெயரில் மாற்றுவதற்கான படிவத்தில் சுப்பையா நாடார்தான் கையொப்பம் போட்டு கொடுத்தார், அதன் அடிப்படையில் மேற்படி காரின் உரிமை என் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. வா.சா.ஆ.33 ஆவணத்தில் சுப்பையா நாடாரின் கையொப்பம் உள்ளதா என்றால்

கையொப்பம் உள்ளது, ஒரு பேப்பரில் கையொப்பமிடப்பட்டு அது அந்த ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.33 ஆவணம் என்னால் போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஒன்று என்றும், என் பெயருக்கு மாற்றம் செய்துகொடுக்க சுப்பையா நாடார் எந்தவொரு கையொப்பமும் போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சுப்பையா நாடாருக்கு ஓட்டுநராக இருந்த சமயத்தில் கிடைத்த ஆவணங்களை பயன்படுத்தி மேலும் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து அந்த காரின் உரிமையை எனது பெயருக்கு மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 18 உயில் ஆவணம் போலியானது என்றும், அதன் அடிப்படையில் எந்த சொத்துக்களும் எனக்கு உரிமை ஆகாது என்றும், நான் சுப்பையா நாடாரின் வாரிசு கிடையாது என்றும் இந்த வழக்கில் நான் கேட்டுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 7 முதல் 9 பிரதிவாதிகள் தான் சுப்பையா நாடாரின் வாரிசுகள் என்றும், அவர்களுக்குத்தான் தாவா சொத்துக்கள் உரிமையாது என்றும் வாரிசுரிமை கோர எனக்கு தகுதி கிடையாது என்றும் தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi